**தலைப்பு - 176 - சிவில் விமான சேவைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியின் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 26,791.4 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 26,613.9 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சின் தேறிய நிதிஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 177.5 மில்லியன் அல்லது மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் 0.66 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | |
| மீண்டெழுபவை | 168.9 | 160.3 | 8.6 | 5.09 |
| மூலதனம் | 26,622.5 | 26,453.6 | 168.9 | 0.63 |
| **மொத்தம்** | **26,791.4** | **26,613.9** | **177.5** | **0.66** |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பீடும் உள்ளபடியான வருமானமும்

2014 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடொன்றினால் ரூபா 5,700 மில்லியன் தொகையான வருமானம் சேகரிப்பதற்கு அமைச்சினால் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 3,605 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி அமைச்சினால் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 63 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 17601 | 2.5 | 2.2 | 1.6 | 1.7 | 10.0 | 8.2 |

## 2.4 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 28,840 ஆகும்.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 176 – சிவில் விமான சேவைகள் அமைச்சு

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ii) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

### 3.2 ஒதுக்கீட்டு கணக்கு

**பாதீட்டு முரண்**

10 செலவின விடயங்களுக்கு ரூபா 174,725,323 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால், நிதியேற்பாட்டில் பயன்பாட்டின் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 11 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான வீச்செல்லையினை கொண்டிருந்தது.

### 3.3 வருமானக் கணக்குகள்

வருமானக் குறியீடு 20.03.02.08 கொண்ட வருமானக் கணக்கிற்குரிய உரிய 2002 யூலை 17 ஆம் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணத்தின் 142 இன் பிரகாரம் வருமான எதிர்வுகூறல்கள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் சரியான அடிப்படையில் கணிப்பிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 3,000 மில்லியன் தொகையான வருமானம் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 5,700 மில்லியனாக மாற்றப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 3,605 மில்லியன் தொகையான வருமானம்

சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், உள்ளபடியான வருமானம் ஆரம்ப மதிப்பீட்டை விஞ்சியிருந்த போதிலும், திருத்தப்பட்ட மதிப்பீட்டை அடைந்திருக்கவில்லை. வருமான மதிப்பீட்டை திருத்துவதற்கான வருமான எதிர்வுகூறல் சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

---

விடய இலக்கம் 17601 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் அறவீடுகள் நிலுவையாயிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 783,675 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் 18 வருடங்கள் வரையான காலமாக நிலவி வந்த போதிலும், அவற்றினை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) அமைச்சினால் காணியின் அட்டோனி அதிகாரத்திற்குரிய உரிய சட்டரீதியான தன்மையை ஆய்ந்தறியாமல் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 224,600 தொகையான ஆதனக் கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 1999 சனவரி 23 ஆந் திகதி சேவையை கைவிட்டுச்சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்படவேண்டியதாக காணப்பட்ட ரூபா 224,600 தொகையான ஆதனக்கடன் தொகை 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வந்த போதிலும், அந்த கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| **(அ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 2009 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 13/2008 (iii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 68,040 | நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி சுமார் மூன்று மாதங்களாக சேவைக்க அறிக்கையிடாது 2014 ஆம் ஆண்டில் விடுமுறையைப்பெற்றிருந்த பெண் உத்தியோகத்தரொருவருக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை** | | |
| 2010 செப்தம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2011 நவம்பர் 15 ஆந் திகதிய PFD/RED/01/04/08 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் 1 மற்றும் 2 ஆம் பந்திகள் | 160,296 | முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 1 இல் உள்ள பெண் உத்தியோகத்தரொருவருக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் முறையான அங்கீகாரமின்றியும் வீட்டு மற்றும் கையடக்கத்தொலைபேசி கட்டணங்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 சனவரி மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது. |

**3.6 செயலாற்றல்**

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) 2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சினால் தபாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருட இறுதியில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பான அறிக்கை அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் மீளாய்வாண்டில் ஸ்ரீ லங்கா எயார் லயின்ஸ் மற்றும் மிஹின் லங்கா கம்பனிகளின் மூலதனத்திற்கு ரூபா 26,113 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அந்த முதலீடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பில் ஆராய்ந்தறியப்பட்டிருக்கவில்லை. அதனால் அந்த முதலீடுகள் தொடர்பில் அமைச்சின் கண்காணிப்பு மிகவும் நலிவான மட்டத்தில் நிலவியது

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்தவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட அத்தகைய சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

அமைச்சின் முன்னாள் கௌரவ அமைச்சர் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் ஆகியோரால் பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட உபசார நடவடிக்கைக்காக ரூபா 157,480 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் அமைச்சின் செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 10 | 09 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 42 | 33 | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 22 | 20 | 02 |
| (v) | அமைய | 02 | 01 | 01 |
| | மொத்தம் | 78 | 65 | 13 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் அரச கம்பனிக்குரிய பதவியணியில் 7 பேர் அமைச்சின் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.